செ.வெ.எண்: 54 நாள்: 25.01.2018

**புதுக்கோட்டை மாவட்டத்தில் தேசிய வாக்காளர் தின விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.**

புதுக்கோட்டை பொது அலுவலக வளாகத்தில் தேசிய வாக்காளர் தினம் 2018 விழிப்புணர்வு பேரணி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (25.01.2018) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தேசிய வாக்காளர் தின விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார். இப்பேரணியில் "வாக்காளர் என்பதில் பெருமிதம் கொள்வோம், வாக்களிக்க தயாராவோம், வாக்குரிமை நமது பிறப்புரிமை, வாக்களிப்போம் ஏற்றம் பெற வாக்களிப்போம், ஜனநாயகம் தழைக்க வாக்களிப்போம்" உள்ளிட்ட பல்வேறு விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி 500க்கும் மேற்பட்ட வருவாய்த்துறை, புதுக்கோட்டை நகராட்சி, பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் உள்ளிட்ட பல்வேறு அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர். இப்பேரணி புதுக்கோட்டை பொது அலுவலக வளாகத்தில் துவங்கி எம்.ஜி.ஆர் சிலை, அண்ணா சிலை, கீழராஜ வீதி, பிருந்தாவனம் கார்னர் வழியாக நகர்மன்றத்தை சென்றடைந்தது.

பின்னர் புதுக்கோட்டை நகர்மன்றத்தில் புதுக்கோட்டை நகராட்சியின் சார்பில் நடைபெற்ற தேசிய வாக்காளர் தின விழிப்புணர்வு முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தேசிய வாக்காளர் தினம் 2018 வாக்காளர்களின் உறுதி மொழியான " ஜனநாயகத்தின் மீது நம்பிக்கையுடைய இந்தியக் குடிமக்களாகிய நாம், நம் நாட்டின் ஜனநாயக மரபுகளையும், சுதந்திரமான, நியாயமான மற்றும் அமைதியான தேர்தல் மாண்பையும் நிலைநிறுத்துவோம் என்றும், மேலும் ஒவ்வொரு தேர்தலிலும் அச்சமின்றியும், மதம், இனம், சாதி, வகுப்பு, மொழி அல்லது எந்தவொரு தூண்டுதலுக்கும் உட்படாமலும் நேர்மையாக சிந்தித்து வாக்களிப்போம் என்றும் உளமார உறுதி ஏற்கிறோம்" என வாசிக்க அனைவரும் வாக்காளர் உறுதி மொழியினை எடுத்துக் கொண்டனர். மேலும் புதிய வாக்காளர்களுக்கு வாக்காளர் அடையாள அட்டைகளை வழங்கியதுடன் தேசிய வாக்காளர் தின போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இப்பேரணியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, புதுக்கோட்டை சார் ஆட்சியர் செல்வி.கெ.எம்.சரயு இ.ஆ.ப., நகராட்சி ஆணையர் (பொ) திரு.ஜீவாசுப்பிரமணியன், வட்டாட்சியர்கள் திரு.தமிழ்மணி, திரு.தவச்செல்வம்(தேர்தல்) மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**